**In the Court of Judicial Magistrate No.I, Kovilpatti.**

DEPOSITION OF WITNESS

(Chapter XXV ,BNSS)

| | | |
|---|---|---|
| Case No. | : | STC No.390/2025 |
| Deposition of witness for Prosecution | : | P.W–1 |
| Name | : | மலர்கொடி, வயது 45 |
| Father Name/Husband Name | : | கஜேந்திரன் |
| Village | : | கரடிகுளம் |
| Taluk | : | கோவில்பட்டி |
| Calling | : | கூலி |

Solemnly affirmed in accordance with the provisions of the Oaths Act, 1969 (Central Act 44 of 1969) on the 15th day of September 2025.

**(Accused absent. 355 BNS petition filed and allowed).**

**<u>முதல் விசாரணை</u>**

1 நான் தற்போது கரடிகுளத்தில் வசித்து கூலி வேலை செய்து வருகிறேன். ஆஜர் இல்லாத எதிரியை எனக்கு தெரியும். 06.11.2024 அன்று எனது அக்கா மகன் பிராபகரனுக்கு அடிபட்டதாக எனது அக்கா புஷ்பராணி எனக்கு போனில் தகவல் சொன்னார். நானும், எனது மூன்றாவது மகள் அபிநயாவும் சேர்ந்து எனது அக்கா பையனை பார்ப்பதற்காக பஸ்ஸில் சென்றோம். பின்பு 07.11.2024 அன்று மதுரையிலிருந்து கோவில்பட்டிக்கு அரசு பேருந்தில் வந்து கொண்டிருக்கும்போது 08.11.2024 அன்று காலை 04.45 மணிக்கு தோட்டலாம்பட்டி அருகே வடக்கேயிருந்து தெற்கே வந்து கொண்டிருக்கும்போது எதிரி கண்டெய்னர் லாரியை அதிவேகமாகவும், அஜாக்கிரதையாகவும் வந்து பேருந்து மீது மோதி விபத்து ஏற்பட்டது.

2 அந்த விபத்தில் எனக்கு முன்நெற்றியிலும், இடது தோள்பட்டையிலும், இரண்டு கால்கள் முட்டியிலும், எனது மகள் அபிநயாவுக்கு வாயிலும், நெஞ்சிலும், இரண்டு கால்களிலும், தலையின் பின்புறத்திலும் காயம் ஏற்பட்டது. பின்பு ஆம்புலன்சில் எங்களை கோவில்பட்டி அரசு மருத்துவமனைக்கு சிகிச்கைக்கு அழைத்து வந்தார்கள். எங்களுடன் சேர்ந்து மொத்தம் ஏழு நபர்களுக்கு காயம் ஏற்பட்டது. நான் சிகிச்சையில் இருந்தபோது

போலீசார் என்னிடம் புகார் வாக்குமூலம் பதிவு செய்தார்கள். என்னிடம் காட்டப்படும் புகார் வாக்குமூலத்திலுள்ள கையொப்பம் என்னுடையதுதான். **(அந்த புகார் வாக்குமூலம் அ.சா.ஆ.1 ஆக குறியீடு செய்யப்படுகிறது).** இது சம்பந்தமாக போலீசார் என்னை விசாரித்தார்கள்.

**எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை**

3 இந்த வழக்கு சம்பந்தமாக நான் புகார்மனு எதுவும் எழுதி கொடுக்கவில்லை என்றால் சரிதான், நான் சொல்ல சொல்ல போலீசார் எழுதினார்கள். நான் முதல் விசாரணையில் சொன்னதைதான் போலீசார் விசாரணையிலும் சொல்லியுள்ளேன். விபத்து நடந்த உடன் பக்கத்தில் இருக்கும் 20 நபர்கள் சேர்ந்துதான் அரசு மருத்துவமனைக்கு எங்களை ஆம்புலன்சில் அழைத்துச் சென்றார்கள். நான் பேருந்தில் எந்த பகுதியில் அமர்ந்து இருந்தீர்கள் என்று போலீசார் விசாரணையில் சொன்னேன். பேருந்தில் எத்தனை நபர்கள் இருந்தார்கள் என்று போலீசார் விசாரணையில் சொன்னேன்.

4 நான் பேருந்தில் சென்றதற்கான டிக்கெட்டை போலீசாரிடம் கொடுத்தீர்களா என்றால் கொடுக்கவில்லை. விபத்து நடந்ததாக சொல்லப்படும் இடம் சாத்தூா – ஸ்ரீகரா பள்ளிக்கு அருகே நடந்ததா என்றால் அங்குதான் விபத்து நடைபெற்றது. நான் போலீசார் கேட்டுக் கொண்டதன் பேரிலும், அதிக நஷ்ட ஈடு பெறுவதற்காகவும் நீதிமன்றத்தில் பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

**மறுவிசாரணை இல்லை.**

Taken before me in open court in the presence of accused and read over to the witness and acknowledged by him/her to be Correct.

Sd/ Tr. K. Anand, B.A, M.L.,
Judicial Magistrate No.1,
Kovilpatti.